1981 ஆகஸ்ட் 24]

திரு. இரா. தாமரைக்கனி : அரசுக்குச் சரியான முறையில் புகார் வராமல் இருந்திருக்கலாம். என்னுடைய ஊருக்குப் பக்கத்து ஊராக இருக்கும் காரணத்தால் எனக்கு நல்ல முறையில் தெரியும். பந்தல்குடி என்ற இடத்தில் 100 ஏக்கர் நிலம் அரசுப் புறம்போக்காக இருக்கிறது. அங்கே அனுமதி வாங்காமல் சாயத் தொழிற்சாலையைச் சேர்ந்தவர்களும், துலுக்கப்பட்டு சிமென்ட் ஆலையைச் சேர்ந்த தனியார்களும் சுண்ணாம்புக் கற்களை எடுத்துக் கொண்டிருக்கிறார்கள். இதைத் தடுக்க கடுமையான நடவடிக்கை எடுக்கப்படுமா? மீறி அவர்கள் எடுத்தால் அவர்களுடைய லைசன்ஸ் ரத்து செய்யப்படுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அங்கேயிருந்து அனுமதி இல்லாமல் எடுத்துச் செல்வதாக அரசுக்குத் தகவல் இல்லை. திரு. தாமரைக்கனி அவர்கள் சொல்வது போல் அவருக்கு அவ்வாறு எடுத்துச் செல்வது தெரிந்து நடந்தால் சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் சொன்னால் கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. இரா. தாமரைக்கனி : சோழபுரம் பந்தல்குடியில் உள்ள அரசு புறம்போக்கு நிலத்தைக் கண்காணிக்க சரியான போலீஸ் பந்தோபஸ்து கொடுத்து காவல்களை நியமிக்க அரசு ஆவன செய்யுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு : அங்கே இருக்கிற சிமென்ட் தொழிற்சாலைக்காக ஒதுக்கப்பட்ட இடங்களில் தனியார் வந்து சுண்ணாம்புக்கல்லை எடுத்துச் செல்லாமல் ஆலை நிர்வாகிகள் காவல்களைக் கொண்டு அந்த இடங்களைப் பாதுகாத்து வருகிறார்கள். அந்தப் பகுதியில் குறிப்பிட்ட இடங்களில் சுண்ணாம்புக் கல் வெட்டி எடுக்க தனியாரும் உரிமை பெற்றிருக்கிறார்கள். கிருஷ்ணராஜா என்பவர் உரிமை பெற்று வெட்டி எடுக்கிறார்கள். அனுமதியோடு வெட்டி எடுப்பதைத் தடுக்க முடியாது.

தனியார்கட்கு கனிவளம் தோண்டி எடுப்பதற்கான உரிமம்

*வினா எண் 38—திரு. எம். சின்னசாமி : மாண்புமிகு தொழில் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கனிவளம் தோண்டி எடுக்கும் (Mining Lease Licence) உரிமை தனியார்கட்கு கொடுப்பதை அரசு நிறுத்தியுள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதற்கான காரணம் என்ன?

(இ) அரசே ஏற்றுநடத்த உத்தேசம் உண்டா?

[1981 ஆகஸ்ட் 24

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: (அ) கனிவளம் தோண்டி எடுக்கும் சுரங்கக் குத்தகை தனியாருக்கு வழங்குவதை அரசு அறவே நிறுத்தவில்லை.

(ஆ) வினாவிற்கு இடமில்லை.

(இ) சுரங்கக் குத்தகை பெற்ற தனிப்பட்டவர்கள் விஞ்ஞான ரீதியில் கனிப்பொருளை வெட்டி எடுப்பதில்லை. சுரங்க நிபந்தனைகள் மீறப்பட்டன. 1978 ஆம் ஆண்டு முதல் நம் தமிழகத்தில் கிடைக்கும் கனிப்பொருளை விஞ்ஞானரீதியில் பயன் படுத்த கனிவள நிறுவனம் ஒன்று நிறுவப்பட்டது. மேலும், தனிப்பட்டவர்களுக்கு சுரங்கக் குத்தகை வழங்குவதைவிட அரசுத் துறையிலோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களாலோ சுரங்கவேலை செய்வதின் மூலம் ஏராளமான கிராமப்புற மக்களுக்கும் படித்த வேலையற்ற இளைஞர்களுக்கும் வேலை வாய்ப்பு நல்க இயலும் என்பதோடு, கிடைக்கும் இலாபத்தையும் பரவலாகப் பகிர்ந்தளிக்கலாம் என்று கருதப்பட்டது. ஆதலால், அரசுத் துறைக்கோ அல்லது கூட்டுறவு நிறுவனங்களுக்கோ தேவைப்படாத பகுதிகளில் தனியாருக்கு சுரங்கக் குத்தகை வழங்குவது பற்றி அரசு தீவிரமாக பரிசீலித்து வருகிறது.

திரு. எம். சின்னசாமி: இந்தக் கனிவளங்களைத் தோண்டி எடுக்கிற உரிமையை நீண்ட காலத்திற்குச் சில அரசியல் பிரமுகர்கள் பெற்று கொள்ளை லாபம் அடித்து ஜப்பான் போன்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வந்துள்ளதென்பதன் பேரில் என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: இந்தக் கனிப் பொருள்களைப் பொறுத்தவரை பெரு ரக கனிப் பொருள்கள், சிறு ரக கனிப் பொருள்கள் என்று இரண்டு வகைப்படும். தமிழ் நாடு அரசு சிறு ரகக் கனிப் பொருள் சட்டத்திற்கு உட்பட்டு ஏற்கனவே, கறுப்புக் கல்லை தனியார் வெட்டி எடுக்க அனுமதி வழங்குவதில்லை என்ற சட்டத்தை இயற்றியது. அதை எதிர்த்து தனியார் உச்ச நீதி மன்றம் வரை போய் அதிலே அரசாங்கம் வெற்றி பெற்றிருக்கிறது. மற்ற மினரல்சைப் பொறுத்த வரை தனியாரும் வெட்டி எடுக்கலாம். தனியார் சிமென்ட் தொழிற்சாலைக்கு வேண்டிய சுண்ணாம்புக் கல்லை வெட்டி எடுக்க தனியாருக்கு உரிமை தரப்பட்டிருக்கிறது. அரசாங்கத் திற்குத் தேவையில்லாத இடங்களைத் தனியாருக்குக் கொடுத்து வருகிறோம்.

திரு. மு. அம்பிகாபதி: தமிழகத்தில் கனி வளத்தை எடுக்கக் கூடிய உரிமை பெற்றிருக்கக்கூடியவர்களுக்கு அந்த உரிமங்களை ரத்து செய்ய அரசாங்கம் முன்வருமா? தென்னாற்காடு மாவட்டத்தில் குன்னம் என்ற கிராமத்தில் ஒரு மலையையே வெட்டி

1981 ஆகஸ்ட் 24]

தனியார் விற்றிருக்கிறார்கள். அது அரசுக்குத் தெரியுமா? ஒரு மலையே காலி செய்யப்பட்டு விட்டது அரசாங்கத்திற்கு தெரியுமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: ஏற்கனவே சொன்னதைப் போல் தமிழ்நாட்டில் இருக்கும் கனி வளங்களை அரசாங்கமே முழுதும் வெட்டி வெட்டி எடுப்பதற்கு உத்தேசம் இல்லை. சுண்ணாம்புக்கல் போன்ற கனிவளங்களை நம்பி ஏராளமான தொழிற்சாலைகளைத் தனியார் துறையில் நடத்தி வருகிறார்கள். கருப்புக் கல்லைப் பொறுத்தவரை அரசாங்கமே எடுத்து நடத்த வேண்டுமென்று தனியாக ஒரு கார்ப்பரேஷனை ஏற்படுத்தி புரட்சித் தலைவர் அரசு செயல்படுத்தி வருகிறது. அதே போன்று மாக்னசைட் நிறுவனம் ஒன்றினையும் தமிழக அரசு பொறுப்பேற்று நடத்தி வருகிறது.

இரண்டு கனிவளங்களைப் பொறுத்த வரையிலும் அரசாங்கமே ஏற்றுச் செயல்பட்டு வருகிறது. மற்றவைகளைப் பொறுத்தவரையில் தேவைக்கு ஏற்ப, தொழிற்சாலைகள் வைத்திருக்கிறவர்களுக்கு அவர்களுடைய தேவையை முன்னிட்டு, அரசாங்கம் அதைப் பரிசீலித்துப் பார்த்து—அரசாங்கத் தொழிற்சாலைகளில் பயன்படுத்துகிற தேவையில்லை என்றால்—கொடுத்து வருகிறோம். இதற்கு முன்னால் இருந்த ஆட்சியிலே கருப்புக் கல்லை 20, 25 ஆண்டுகள் என்று நீண்ட கால குத்தகைக்கு எடுத்துக்கொண்டு சிலர் நடத்தி வந்தார்கள். அப்படி நடத்தி வந்தவர்கள் தவறு செய்கிறார்கள் என்று அரசின் கவனத்திற்குக் கொண்டு வருகிறபோது அரசு தக்க நடவடிக்கையை எடுக்கும்.

திரு. பி. எம். தங்கவேல்ராஜ்: தலைவர் அவர்களே, திருச்சி மாவட்டத்தில் என்னுடைய கிருஷ்ணராயபுரம் தொகுதியில் கீரனூரில் பச்சைக் கல், நீலக்கல், வெள்ளைக்கல் ஆகியவை, லட்சக் கணக்கான ரூபாய் மதிப்புள்ளவைகளை தனியார்கள் எடுத்து வருகிறார்கள். அவற்றை கலெக்டர், ஆர்.டி.ஒ., தாசில்தார் ஆகியோர்கள் பார்வையிட்டு 20, 30 மூட்டைகள் கைப்பற்றப் பட்டு அந்த இடத்திலேயே கிடக்கின்றன. அவைகளை எடுத்தவர்கள் மீது இதுவரையில் எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. ஆகவே இதுபோன்றவற்றை அரசாங்கமே எடுத்து நடத்த முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொல்கிறபோதே, அரசாங்கத்தின் கவனத்திற்கு அது கொண்டுவரப்பட்டு கலெக்டர், ஆர்.டி.ஓ. ஆகியோர் கைப்பற்றி இருக்கிறார்கள் என்று சொன்னார்கள். அரசாங்கத்தின் கவனத்திற்கு வந்திருப்பதால் திருடியவர்கள் மீது நிச்சயமாக நடவடிக்கை எடுப்பார்கள். எந்தப்

பகுதி என்பதைப்பற்றி உறுப்பினர் எழுதிக் கொடுத்தால் விசாரித்து சம்மந்தப்பட்டவர்கள்மீது அரசு நிச்சயமாக நடவடிக்கை எடுக்கும்.

திரு. ப. நெடுமாறன்: அவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே நெய்வேலி நிலக்கரியை மத்திய அரசாங்கம் எடுத்துக் கொள்கிறது. ஆனால் ஆந்திர மாநிலத்திலே உள்ள சிங்கரேணியிலே கிடைக்கின்ற நிலக்கரியை மத்திய அரசு எடுத்துக்கொள்ள முயன்றபோது அதற்கு ஆந்திர மாநில அரசு ஒப்புக் கொள்ளவில்லை. மாநில அரசே அதை அங்கே வெட்டியெடுக்கிறது. அப்படி வெட்டியெடுக்கிற உரிமையை தாமே வைத்துக் கொள்ளவேண்டுமென்று உறுதியோடு இருக்கிறது. அதைப்போல தமிழகத்திலேயும் உள்ள நிலக்கரி சுரங்கங்களைப் பொறுத்த வரையில் தமிழக அரசே அதற்கான உரிமைகளை வைத்துக் கொள்வதற்கு மத்திய அரசாங்கத்துடன் போராடுவதற்கு அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. எஸ். திருநாவுக்கரசு: நான் ஏற்கனவே சொன்னதைப்போன்று மேஜர் மினரல்ஸ், மைனர் மினரல்ஸ் என்று இரண்டு வகையான மினரல்ஸ் இருக்கின்றன. நிலக்கரியெல்லாம் மேஜர் மினரல்ஸ் என்பதன் கீழ் வருகிறது. அது மத்திய அரசின் வரம்பில்தான் இருக்கிறது. சிங்கரேணியிலே மாநில அரசின் வரம்பிலே அது இருப்பதாக எனக்குத் தெரியவில்லை.

ஆதிதிராவிடர் நலனுக்கான விசேட திட்டம்

*வினா எண். 39—திரு. பெ. சு. திருவேங்கடம்: மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா:

(அ) தாழ்த்தப்பட்டோரின் நலனுக்கு மைய அரசு அமைக்க உத்தேசித்துள்ள விசேட திட்டத்தைப் பற்றி மாநில அரசோடு கலந்துரையாடப்பட்டதா?

(ஆ) ஆம் எனில், மாநில அரசு கூறியுள்ள ஆலோசனைகளின் விவரம் என்ன?

மாண்புமிகு திரு. எம் விஜயசாரதி: (அ) ஆம்.

(ஆ) ஆதிதிராவிடர்களின் பொருளாதார மேம்பாட்டிற்காக ஒரு சிறப்பு உள்ளடக்கத் திட்டத்தினை உருவாக்கவேண்டுமென்று மாநில அரசுகளை மைய அரசு கேட்டுக் கொண்டது. இந்திய அரசு கொடுத்துள்ள வழிகாட்டிக் குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டும், தமிழ்நாட்டில் வசிக்கும் ஆதிதிராவிடர்